மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்

EA.3/19 in EP.10/2019

வா.சா.3

தேதி : 11.03.2022

பெயர் : முத்துமாரி

1873 ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் 10 வது பிரிவின் படி 2022 ம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ம் நாள் உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை

நான் அகரம் கிராம நிர்வாக அதிகாரியாக 2020 ம் வருடம் அக்டோபர் மாதம் முதல் பணிபுரிந்து வருகிறேன். அகரம் கிராமத்தில் உள்ள மக்கள் விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் ஓரளவு தெரியும். Ex.X14 ல் உள்ள அருணாச்சல நாடார், துரையப்ப நாடார், தங்கவேல் நாடார் இவர்களை பற்றி நான் கேள்விப்பட்டுள்ளேனா என்றால் கேள்விப்பட்டதில்லை. மேற்படி நபர்களின் தந்தையார் பெயர் நாராயண நாடார் என்பது தெரியுமா என்றால் சரியாக தெரியவில்லை. மேற்சொன்ன 3 நபர்களும் சகோதரர்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. சா.சா.ஆ.14 ல் ஏரல் வட்டாட்சியர் அலுவலகத்தில் இல்லை என்றால் சரிதான். சா.சா.ஆ.14 ல் ஆவணங்கள் எதன் அடிப்படையில் பெயர்கள் பதிவு செய்யப்பட்டது என்றால் அனுபவத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டது. முதல் விசாரணையில் நான் சில பெயர்கள் தட்டச்சு பிழையினாலும், நிலத்தை விற்பனை செய்ததாலோ விடுபட வாய்ப்புகள் உள்ளது என்றால் உள்ளது. சா.சா.ஆ.14 ல் 1 வது சொல்லப்பட்ட ஞா.துரைப்பாண்டி நாடார் பெயர் தட்டச்சுப் பிழையினால் ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் அதை உறுதியாக கூற இயலாது. அதனால் தான் மற்ற சா.சா.ஆவணங்கள் 15 முதல் 16 வரையிலுள்ள ஆவணங்களில் ஞா.துரைபாண்டி நாடார் பெயர் இல்லை என்று சொன்னால் நிலத்தை விற்பனை செய்திருந்தாலும் விடுபட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். சா.சா.ஆ.14 ல் பட்டா எண் 444 ல் அண்ணலெட்சுமி அம்மாள் என்ற பெயரும் தட்டச்சு பிழையினால் உருவாக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சா.சா.ஆ.17 ல் பார்வதி

ஆதித்தன் மனைவி அன்னலெட்சுமி அம்மாள் பெயரும் தட்டச்சு பிழையினால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. புஞ்சை ச.எண். 48/5 ல் நாராயணநாடார் வாரிசுகளுக்கு மட்டும் தான் உரிமை உள்ளது அவர்கள் பெயரை தவிர சா.சா.ஆ 15 முதல் 16 வரை உள்ள ஆவணங்களில் வேறு நபர்களின் பெயரில் உள்ளதால் மேற்படி ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சா.சா.ஆ.14 முதல் 16 வரை உள்ளவைகளில் அருணாச்சல நாடார் தங்கவேல் நாடார் துரையப்ப நாடார் ஆகியோர்களுக்கு மட்டும் தான் முழு உரிமை உள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.